# தொகுத்தறி மதிப்பீடு – பருவம் – 3
# தமிழ் – 2023 – 24
# வகுப்பு – 4

பெயர் : ______________　　மதிப்பெண் : 60

பிரிவு : ______________　　நேரம் : 2 மணி

**1. விடைக்கேற்ற வினாக்களை உருவாக்குக.**　　2 × 2 = 4

கல்லுக்கு அடியில் புதையல் உள்ளது.

அ) ______________ (எங்கு)

ஆ) ______________ (என்ன)

**2. சொல்லுக்குள் சொற்களைக் கண்டுபிடித்து எழுதுக.**　　3 x 2 = 6

அ) பாட்டுப்போட்டி – ________, ________

ஆ) கழுதைப்புலி – ________, ________

இ) கவிதைகள் – ________, ________

**3. மரபுச் சொற்களைக் கண்டறிந்து வட்டமிடுக.**　　2 x 2= 4

அ) அவனது கட்டுக்கதையை அனைவரும் ஆகாயத்தாமரை என்றுகூறிச் சிரித்தனர்.

ஆ) அரக்கப்பரக்க ஓடிய பூனை தட்டிவிட்டு கண்ணாடி சுக்குசுக்காக உடைந்தது.

**4. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.**　　3 x 2 = 6

அ) பிர்பகலில் நான் பான்டியாட்டம் ஆடினேன்.

______________

ஆ) தாயம், ஐந்தாங்கல், பல்லாங்குளி முதலியன உள்விலையாட்டுகள்.

______________

இ) தக்காலிப்பழங்கள் விர்பனைக்காகப் பெட்டிகளில் அடுக்கப்பட்டிருந்தன.

______________

**5. பயனிலைகளை உரிய இடத்தில் நிரப்புக.**　　3 x 2 = 6

| |
|---|
| முக்கனிகள் யாவை?,　ஜான்சி சிறந்த மாணவி,　நடனம் ஆடினாள்,<br>கண்ணன் கைதேர்ந்த சிற்பி,　கதை கூறினான்,　கோப்பையை வென்றது யார்? |

| அ) பெயர்ப் பயனிலை | ஆ) வினைப் பயனிலை | இ) வினாப் பயனிலை |
|---|---|---|
| 1. | 1. | 1. |
| 2. | 2. | 2. |



www.Padasalai.Net

CS CamScanner

Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

6. உரிய சொற்களைத் தேர்ந்தெடுத்து நிரப்புக. 1 x 4 = 4

(அது, அவை, அவன், அவர்கள், அவள்)

பாலனும் ______________ தங்கையும் விடுமுறை முடிந்து, தங்கள் ஊருக்குத் திரும்பினர்.

______________ செல்லும் வழியில், கொக்குகள் வயலில் நிற்பதைக் கண்டனர்.

______________ ஒற்றைக்காலில் நின்று கொண்டிருந்தன. அருகில் மரம் ஒன்று இருந்தது.

______________ மிகவும் பெரிதாக இருந்தது.

7. கடிதத்தை நிறைவு செய்க. 1 x 6 = 6

______________,

______________.

அன்புள்ள தாத்தா,

நாங்கள் ______________ நலம். அதுபோல ______________ அனைவரின் ______________ அறிய ஆவல். அடுத்த மாதம் எங்கள் பள்ளியில் தமிழ் இலக்கியமன்ற விழா நடைபெற உள்ளது. ______________________________________________

______________________________________________

______________________________________________

மிகவும் மகிழ்ச்சி அடைவேன்.

ஆவலுடன் எதிர்பார்க்கும்,

______________

8. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க. 2 x 2 = 4

நீர், நிலம், காற்று, ஒலி போன்றவற்றில் ஏற்படும் பல்வேறு மாசுகள், மனிதர்களுக்கு மிகுந்த துன்பத்தைத் தருகின்றன. அவைபோலவே, சற்றும் குறையாத பாதிப்புகள் மின்னணுக் கழிவுகளாலும் ஏற்படுகின்றன. ஒவ்வொரு நாளும் நம்மால் தூக்கி எறியப்படும் மின்னணுக் கழிவுகள், நிலத்தையும் சுற்றுச்சூழலையும் பெரிதும் சீர்கேட்டுக்கு உள்ளாக்குகின்றன. மின்னணுக் கழிவுகளை முறையாக வகைப்படுத்தி, மறுசுழற்சி செய்வதொன்றே இச்சிக்கலுக்குத் தீர் வாகும்.

அ) மனிதர்களுக்குப் பாதிப்புகள் ஏற்படுத்துபவை எவை?

______________________________________________

ஆ) மின்னணுக் கழிவுகளை ஏன் மறுசுழற்சி செய்ய வேண்டும்?

______________________________________________

______________________________________________



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

CamScanner

9. பொருத்துக. 6 x 1 = 6

| | | |
|---|---|---|
| அ) Whatsapp | - | விசைப்பலகை |
| ஆ) Facebook | - | அச்சுப்பொறி |
| இ) Data | - | புலனம் |
| ஈ) Printer | - | மின்னஞ்சல் |
| உ) Keyboard | - | முகநூல் |
| ஊ) E-mail | - | தரவு |

10. தொடர்களை வரிசைப்படுத்தி எழுதுக. 1 x 4 = 4

1) மலையும், "உன்னை எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது" என்று பதிலளித்தது. "இதைத்தான் எல்லாரும் எதிரொலி என்று கூறுவர்; அன்பைப் பெற வேண்டுமெனில் அன்பைத் தரவேண்டும்", என்றார் அப்பா.
2) நன்மை, தீமையைத் தீர்மானிப்பவை நம் செயல்களே என்பதை அறிந்துகொண்டான் மகன்.
3) மகன் மகிழ்ச்சியுடன், "உன்னை எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது" என்று மலையைப் பார்த்துக் கத்தினான்.
4) தந்தையும் மகனும் மலைப்பகுதியில் நடந்து சென்று கொண்டிருந்தனர்.

| |
|---|
| 1. |
| 2. |
| 3. |
| 4. |



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com
CamScanner

**11. அழைப்பிதழைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.** **3 x 2 = 6**

**விளையாட்டு விழா அழைப்பிதழ்**

**நேரம் :** காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை **இடம் :** ஆடுதுறை, தஞ்சாவூர் மாவட்டம்.

**போட்டிகள் விவரம்**

| நாள் | பங்கேற்பாளர்கள் | போட்டிகள் |
|---|---|---|
| 15.01.2025 | ஏழு வயது முதல் பன்னிரண்டு வயது வரை | 100 மீ ஓட்டம், நீளம் தாண்டுதல், கயிறு இழுத்தல் |
| 16.01.2025 | பதின்மூன்று வயது முதல் பதினெட்டு வயது வரை | தொடர் ஓட்டம், வட்டு எறிதல் |
| 17.01.2025 | பதினெட்டு வயதிற்கு மேற்பட்டவர்கள் | பல்லாங்குழி, சடுகுடு, உறியடித்தல் |

அ) குழுவாகக் கலந்துகொள்ளும் போட்டிகள் யாவை?

______________________________

ஆ) அகத்தியாவிற்கு வயது பத்து; அவள் எந்தெந்தப் போட்டிகளில் கலந்துகொள்ள முடியும்?

______________________________

இ) 17.01.2025 அன்று நடைபெறும் போட்டியில் யாரெல்லாம் கலந்து கொள்ளலாம்?

______________________________

**12. குறிப்புகளைப் படித்து செய்தியாக மாற்றி எழுதுக.** **1 x 4 = 4**



ஜெமினி சர்க்கஸ்
காட்சி நேரம்:
1:00 பி.ப, 4:00 பி.ப, 7:00 பி.ப
நாள்: 01.05.2024 முதல்
05.05.2024 வரை
இடம்: தீவுத்திடல், சென்னை.

புலியோடு விளையாடு
பேசும் கிளி
கோமாளி
கட்டணம்: குழந்தைகள் – ₹20
பெரியவர்கள் – ₹50

வாரீர்! வியப்பில் ஆழ்வீர்!





www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

CS CamScanner